## தமிழ்நாட்டின் பள்ளிகளில் 82.5 சதவிகித திறன்மிகு வகுப்பறைகள்!

# இந்தியாவில் முதலிடம் பெற்று மாபெரும் சாதனை!

## ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வறிக்கையில் தகவல்!


**சென்னை, மார்ச் 26 -**

**“தமிழ்நாட்டில் 82.5 சதவிகித பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன என்றும், பி.ஜே.பி. ஆட்சி செய்யும் மாநிலங்களைவிட திறன்மிகு வகுப்பறைகள் கொண்டுள்ளதில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது” என்றும் ஒன்றிய அரசின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.**

**மேலும் அவ்வறிக்கையில் குஜராத் மாநிலத்தில் 57.1 சதவிகிதம் பள்ளிகள், மத்தியப் பிரதேசம் மாநிலத்தில் வெறும் 7.6 சதவிகிதம் பள்ளிகள், மகாராட்டிரம் மாநிலத்தில் வெறும் 4.6 சதவிகிதம் பள்ளிகள், உத்தரப்பிரதேச மாநிலத்தில் வெறும் 3.6 சதவிகிதம் பள்ளிகளில் மட்டுமே திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன என்றும் ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

**‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்ற பின், ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாடு இந்திய அளவில் முதல் மாநிலமாக எழுச்சி பெற்றுள்ளது என்பதை எல்லோரும் பாராட்டி வருகின்றனர்.**

இந்நிலையில் 2024-25ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின்



ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை தற்போது வெளியிடப் பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது :-

இந்த அறிக்கையின்படி, தமிழ்நாட்டிலுள்ள 82.5 சதவிகித அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்து, திறன்மிகு வகுப்பறைகள் கொண்டுள்ளதில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் எனும் சாதனை பறைசாற்றப்பட்டுள்ளது.


தமிழ்நாடு திறன்மிகு வகுப்பறைகளில் முதலிடம் பெற்றுள்ள நிலையில், பி.ஜே.பி ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் இந்த திறன்மிகு வகுப்பறைகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருப்பதை இந்த அறிக்கை மேலும் வெளிப்படுத்தியுள்ளது. அதாவது,

குஜராத் மாநிலத்தில் 57.1 சதவிகிதப் பள்ளிகளிலும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் வெறும் 7.6 சதவிகிதப் பள்ளி களிலும், மகாராட்டிர மாநிலத்தில் வெறும் 4.6 சதவிகிதப் பள்ளிகளிலும், உத்தரப்பிரதேச மாநிலத்தில் வெறும் 3.6 சதவிகிதப் பள்ளிகளிலும் மட்டுமே திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ல் ஆட்சிப்பொறுப் பேற்ற நிலையில், தமிழ்நாட்டில் 43.5 சதவிகித பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்திருந்தன.

### 99 சதவிகிதப் பள்ளிகளில் இணையதள வசதிகள்!

தமிழ்நாட்டில் மாணவ - மாணவிகள், இளைஞர்கள் அனைவரும் தரமான சிறந்த கல்வி கற்று இந்திய அளவில் உயர்ந்து மிளிர்ந்திட வேண்டும் என்னும் உன்னதமான குறிக்கோளோடு அனைத்து வகையிலும் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.




தமிழ்நாட்டில் ஏறத்தாழ 99 சதவிகித பள்ளிகளில் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, உயர்ந்த தொழில்நுட்பத்துடன் கூடிய ஒருங்கிணைந்த திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்படுவதன் மூலம் மாணவமாணவிகள் எளிதில் சிறந்த கல்வி கற்க முடியும் என்பதற்காக தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் எல்லாம் திறன்மிகு வகுப்பறைகளை உருவாக்கினார்கள்.

அதன் பயனாக 2021-22ஆம் ஆண்டில் இருந்த திறன்மிகு வகுப்பறைகள் எண்ணிக்கையைவிட இரண்டு மடங்கு அளவில் உயர்ந்து 2024-25இல் 82.5 சதவிகித பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன. இதனை ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்ட கல்வி ஆய்வு அறிக்கை 2024-25 குறிப்பிட்டுள்ளது.

**அண்மைக்காலமாக ஒன்றிய அரசு அமைப்புகள் வெளியிட்டுவரும் ஆய்வு அறிக்கைகள் எல்லாம் தமிழ்நாடே முதலிடம் என்பதனை வெளிப்படுத்தி வருகின்றன. அந்தவரிசையில், திறன்மிகு வகுப்பறைகளைக் கொண்டுள்ளதிலும் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது திராவிட மாடல் அரசு என்பதை ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கையும் தெளிவாகப் புலப்படுத்தி உள்ளது.**

---

எரிவாயு தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்காத

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

### நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கம்!

*புதுடெல்லி, மார்ச் 26-*

மேற்காசியப் போரால் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, இந்தியாவில் கடும் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. வணிக சிலிண்டருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், வீட்டு உபயோக சிலிண்டருக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்நிலையில், எரிவாயு தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், காலி சிலிண்டர்கள், வெற்று வாக்குறுதிகள் என்ற பதாகைகளுடன் எம்.பி.க்கள் முழக்கங்களை எழுப்பினர்.

---

எஸ்.ஐ.ஆர். பணிகளில்

## மேற்குவங்கத்தில் மட்டும் குழப்பம் ஏன்?

### தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் கேள்வி!

*புதுடெல்லி, மார்ச் 26-*

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பது உள்ளிட்ட பணிகளில் நிலவும் குழப்பம் மற்றும் உரிய படிவங்கள் வழங்கப்படாதது குறித்து உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திடம் சரமாரியாக கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு, ஜனநாயகத்திற்கு எதிராக உள்ளதாகவும், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்படுவது மிகவும் ஆபத்தானது என்றும் உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

எஸ்.ஐ.ஆர். பணிகளின்போது, மேற்குவங்கத்தில் பலருக்கு முறையாக படிவம் வழங்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்



துள்ளது.

மேலும், வாக்காளர்கள் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது குறித்து எந்தவித தகவலும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர் பணிகள் நடைபெற்று முடிந்த நிலையில், மேற்குவங்கத்தில் மட்டும் ஏன் குழப்பம் நிலவுகிறது என்றும் தேர்தல் ஆணையத்தை உச்சநீதிமன்றம் சாடியுள்ளது.

---

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

## மேல்மலையனூரில் கழக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*செஞ்சி, மார்ச் 26 -*

ஒன்றிய பா.ஜ.க. மோடியுடன் கூட்டணி வைத்துள்ள அ.தி.மு.க. எடப்பாடிக்கு ஓட்டு போடக்கூடாது என மக்கள் முடிவு செய்துள்ளதாகவும் முதலமைச்சரின் நிர்வாகத் திறமையாலும் அவரது சொல் செயல் திட்டங்களால் தி.மு.க.விற்கு ஓட்டு போட அ.தி.மு.க. தொண்டர்கள் தயாராக உள்ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மேல்மலையனூர் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கிளை கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் மேல்மலையனூரில் நடைபெற்றது.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர்சாந்தி சுப்ரமணியன், மேல்மலையனூர் மத்திய ஒன்றிய செயலாளர் நாராயணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் - முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் ஒவ்வொரு இல்லத்திலும் ஒவ்வொரு உள்ளத்திலும் சென்றடைந்துள்ளது அந்த வகையில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு பெண்கள் வாக்குச்சாவடிகளில் 75% இருந்து 80% ஆகவும்,ஆண்கள் வாக்குச்சாவடியில் 60% இருந்து 65% ஆகவும் தி.மு.க. கூட்டணிக்கு வாக்குகள் பதிவாகும் என கருத்துக்கணிப்பு உள்ளது.

ஒவ்வொரு வாக்காளர்களையும் ஐந்து முறை சந்தித்து முதலமைச்சரின் திட்டத்தை கூறி வாக்கு சேகரிக்க வேண்டும்.

இந்த தேர்தலில் தி.மு.க.வின் சாதுத்தியமாக பணியை மேற்கொள்ள வேண்டும். வாக்காளர்களை வணங்கி முதலமைச்சர் செய்த சாதனைகளையும் மீண்டும் செய்ய உள்ள திட்டங்களையும் எடுத்துக் கூறி ஓட்டு கேட்க வேண்டும்.

80 வயதுக்கு மேற்பட்ட வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகள் அவர்களுடைய இல்லத்தில் இருந்து வாக்களிப்பதற்கு இந்திய தேர்தல் ஆணையம் வழிவகை செய்துள்ளது. தற்போது தேர்தல் ஆணையம் சார்பில் வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வாக்களிப்பதற்கு ஒப்புதல் படிவம் 2.வழங்கப்பட்டு வருகிறது. கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் படிவம் 2 முறையாக அவர்களுக்கு சென்றுள்ளதா என கண்டறிந்து அவர்களுக்கு படிவம் சென்று சேரும் வகையில் மேற்பார்வையிட்டு உதவி செய்ய வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க. மோடியுடன் கூட்டணி வைத்துள்ள அ.தி.மு.க. எடப்பாடிக்கு ஓட்டு போடக்கூடாது என மக்கள் முடிவு செய்துள்ளனர்.முதலமைச்சரின் நிர்வாகத் திறமையாலும் அவரது சொல் செயல் திட்டங்களால் தி.மு.க.விற்கு ஓட்டு போட அ.தி.மு.க. தொண்டர்கள் தயாராக உள்ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கூட்டத்தில்மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய அவைத் தலைவர்கள் மன்ன ஏழுமலை, உதயகுமார், ஆறுமுகம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் பெருமாள், சிவசக்தி, ரகுராமன், தாஹிரா அப்துல் வகாப் அரிதாஸ், காந்திமதி ஏழுமலை, மாவட்ட பிரதிநிதிகள் செந்தில்குமரன், ஜெய்சங்கர், ஜி பி எஸ் முருகன், அர்ஷத், வேணு, குபேந்திரன், ரவிச்சந்திரன், ராஜா ஒன்றிய பொருளாளர் சரவணன், கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட அனைத்து தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

மருத்துவக் காரணங்களுக்காக

## 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொண்டு செல்லலாம்!

### தேர்தல் ஆணையம் அனுமதி!

*சென்னை, மார்ச் 26 -*

சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் கையேடு 2026 ஐ தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார். இந்த கையேட்டில் தமிழ்நாட்டில் ஏற்கனவே நடைபெற்ற தேர்தல் குறித்தான அனைத்து விவரங்களும் விரிவாக இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், நிகழ்ச்சியில் உரையாற்றிய தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்,

தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் நகர்ப்புறத்தில் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்ததாகவும், அதனால், தற்போது நகர்ப்புறத்தில் வாக்குபதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். இதையடுத்து, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் ஐம்பதாயிரத்திற்கும் மேல் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளதாகவும், இதனை தலைமைத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும என்று தெரிவித்தார். இதனிடையே, மருத்துவ காரணத்திற்காக மட்டும், பொதுமக்கள் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை whatsapp உள்ளிட்ட சமூக வலைதளம் வழியாக கூட காண்பித்து எடுத்து செல்லலாம் என கூறினார்.

---



மு.க.ஸ்டாலின் வழங்கும் விடியல் பயணம் - உரிமைத் தொகையால் தலை நிமிர்ந்தோம்!

